(ஆ) ..........................................................................................................................

32. எந்தவொரு நாட்டில் அல்லது நிறுவனத்தில் ஏற்படும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி மூலம்தான் அந்த நாட்டினது அல்லது நிறுவனத்தினது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது.

(i) நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை விளக்குவதற்கான பொருத்தமான **இரு** வரைவிலக்கணங்களைத் தருக.

(அ) ..........................................................................................................................

(ஆ) ..........................................................................................................................

(ii) நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்காகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையினது **இரு** நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(அ) ..........................................................................................................................

(ஆ) ..........................................................................................................................

[பக் 5 ஐப் பார்க்க.

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது.]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2013 (2014)


**(04) முகாமைத்துவ விவேகம்**
Aptitude for Management

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்**



※ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம், ஐந்தாம் பக்கங்களில் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

※ இவ்வினாத்தாள் பகுதி **I** பகுதி **II** ஆகிய பகுதிகளை கொண்டு **11** பக்கங்களிலும் **50** வினாக்களையும் கொண்டது.

※ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

※ பகுதி I **இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலும் பகுதி II இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.

※ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலங்கள்** ஆகும்.

※ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

※ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

※ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

※ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

※ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை எடுத்தல் என்பன குற்றமாகும்.

※ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 3 | |
| 3 | 4 - 7 | |
| 4 | 8 - 10 | |
| 5 | 11 - 15 | |
| 6 | 16 - 20 | |
| 7 | 21 - 28 | |
| 8 | 29 - 35 | |
| 9 | 36 - 40 | |
| 10 | 41 - 45 | |
| 11 | 46 - 50 | |
| **மொத்தம்** | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புளளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் / விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

தேசிய உணவு கூட்டுத்தாபனம் மக்களுக்கு அவசியமான உணவுப் பொருட்களை குறைந்த விலைக்கு வழங்கும் முக்கியமான அரச கூட்டுத்தாப்னமாவதுடன் இதன் தலைமை அலுவலகம் மற்றும் தலைமை களஞ்சிய கட்டட தொகுதி என்பன தலைநகரிலே அமைந்துள்ளன.

திரு. சந்திரன் விக்கிரமநாதன் இந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவராவதோடு கூட்டுத்தாபனத்தினால் பகிர்ந்தளிக்கப்படும் உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு பகிர்ந்தளிப்பதற்காக நாடு பூராகவும் சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறான களஞ்சியசாலைக் கோலமொன்று காணப்படுகிறது. மாகாணம் ஒன்றில் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைகள் பல அமைந்துள்ளதோடு அம் மாகாணத்தில் காணப்படும் சகல களஞ்சியசாலைகளையும் மேற்பார்வை செய்வதற்காக மாகாண முகாமையாளர் ஒருவர்வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். கூட்டுத்தாபனத்தினது ஒவ்வொரு களஞ்சியசாலைகளுக்குமாக இருப்பு அலுவலர் ஒருவர் இணைக்கப்பட்டு களஞ்சியசாலையினது பொறுப்பு அந்த அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த களஞ்சியசாலைகளுள் சில களஞ்சியசாலைகளின் பாதுகாப்பிற்காக கூட்டுத்தாபனத்தினது ஊழியர்களான நிரந்தர பாதுகாப்பு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு மற்றும் சில களஞ்சியசாலைகளுக்கு பாதுகாப்பை வழங்கும் பொறுப்பு தனியார் பாதுகாப்பு சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே தேவைக்கேற்றவாறு கூட்டுத்தாபனத்தினது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இந்த தனியார் பாதுகாப்பு சபையினது சேவை பெற்றுக் கொள்ளப்படும்.

2014.06.06ஆம் திகதி நண்பகல் தேசிய உணவுக் கூட்டுத்தாபனத்தின் நெலும்வில பிரதேசத்திற்குப் பொறுப்பான மாகாண முகாமையாளரான திரு. அனுஷன் விஜயரத்தினம் என்பவர் கூட்டுத்தாபன தலைவரை தொலைபேசியில் அழைத்து பேசும்போது தன்னால் மேற்பார்வை செய்யப்படும் களஞ்சியசாலையான நெலும்வில களஞ்சியசாலையிலே பெருந்தொகையான அரிசி இருப்பு குறைவாக காணப்படுவதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறியக் கொடுத்தார். அவ்வாறே தன்னால் இந்தத் தகவல் தொடர்பாக நெலும்வில களஞ்சிய சாலையின் இருப்பு அலுவலரான திரு. சிவபாலன் ஹெக்ரரிடம் விடயத்தை விசாரித்த போது அவ்வாறு குறைந்த அரிசித் தொகுதியானது இன்று (2014.06.06) இரவு களவாக இரகசியமாக களஞ்சியசாலைக்கு எடுத்துவரப்பட்டு குறைவினைச் சரிசெய்வதற்கு திட்டமொன்று உள்ளதாகவும் அது தொடர்பாக களஞ்சியசாலையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் கூட்டுத்தானத்தினது பாதுகாப்பு ஊழியரின் உதவி பெறப்பட்டுள்ளதாகவும் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தலைவருக்கு மேலும் அறியக் கொடுத்தார்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

1. நெலும்வில களஞ்சியசாலை தொடர்பாக மாகாண முகாமையாளரினால் அறிவிக்கப்பட்ட தகவல்களுக்கேற்ப அந்த களஞ்சியசாலை தொடர்பாக திரு. சந்திரன் விக்கிரமநாதனினால் உடனடியாக எடுக்கக்கூடிய மிகப் பொருத்தமான படிமுறை யாது?
   (1) உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்றைக் கொடுக்கும்படி மாகாண முகாமையாளருக்கு அறிவித்தல் வழங்கல்.
   (2) நெலும்வில களஞ்சியசாலையினது இருப்புக்களை கணக்கெடுப்பதற்காக குழுவொன்றை உடனடியாக நியமித்தல்.
   (3) மாகாண முகாமையாளரை உடனடியாக களஞ்சியசாலைக்கு அனுப்பி களஞ்சியத்தில் இருப்பு ஆவணத்தை தனது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டு களஞ்சியசாலைக்கு சீல் இடுமாறு அறிவுறுத்தல் வழங்கல்.
   (4) திரு.சிவபாலன் ஹெக்ரரினை தொலைபேசியில் அழைத்து மாகாண முகாமையாளரினால் தரப்படும் தகவல் தொடர்பாக அவரின் கருத்தைப் பெற்றுக் கொள்ளல். (.........)

2. திரு.சந்திரன் விக்கிரமநாதனுக்கு 2014.06.06 ஆந் திகதி நண்பகல் கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பிற்கேற்ப அச்சந்தர்ப்பத்தில் இருந்து நெலும்வில களஞ்சியசாலையினது பாதுகாப்பு தொடர்பாக எடுக்கக்கூடிய சிறந்த படிமுறை யாது?
   (1) மாகாண முகாமையாளருக்கு களஞ்சியசாலையிலே இரவு தங்கியிருக்குமாறு அறிவித்து ஆலோசனையை வழங்குதல்.
   (2) தனியார் பாதுகாப்புச் சபையிடம் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஒப்படைத்தல்
   (3) களஞ்சியசாலையின் நிரந்தர பாதுகாப்பு அலுவலருக்கு சம்பவம் தொடர்பாக விளக்கமளித்து கடமைகளை சரியாக செய்யுமாறு எச்சரிக்கை செய்தல்.
   (4) திரு. சிவபாலன் ஹெக்டரினை உடனடியாக தலைமை அலுவலகத்திற்கு அழைத்தல். (.........)

3. நெலும்வில களஞ்சியசாலையில் காணப்படும் இருப்பை உடனடியாக கணக்கிடுவதற்காக எடுக்கக்கூடிய சிறந்த நடைமுறை யாது?
   (1) இருப்பு கணக்கெடுப்பதற்காக தலைமை அலுவலகத்தில் இருந்து கணக்கு பரிசோதனை குழுவினரை உடனடியாக களஞ்சியசாலைக்கு அனுப்பி வைத்தல்.
   (2) இருப்பை உடனடியாக கணக்கெடுக்கும்படி மாகாண முகாமையாளருக்கு அறிவுறுத்தல்
   (3) இருப்பை கணக்கெடுப்பதற்காக பொலிசினதோ அல்லது பாதுகாப்பு பிரிவினரது உதவியைப் பெற்றுக் கொள்ளல்.
   (4) திரு. சந்திரன் விக்கிரமநாதன் உடனடியாக பண்டகசாலைக்கு வருகை தந்து மாகாண முகாமையாளரின் உதவியுடன் இருப்பை கணக்கெடுத்தல். (.........)

[பக் 3 ஐப் பார்க்க.

4. நெலும்வில பண்டகசாலையில் இருப்பு குறைவு உறுதிப்படுத்தப்பட்டதுடன் திரு. சிவபாலன் ஹெக்டர் தொடர்பாக உடனடியாக எடுக்க வேண்டிய படிமுறைகள் எவை?

(1) நெலும்வில பண்டகசாலையை தொடர்ந்து சேவை செய்வதற்கு கருதி ஒழுக்காற்று விசாரணையினை மேற்கொள்ளல்.

(2) பணித் தடைசெய்து ஒழுக்காற்று விசாரணையினை முன்னெடுத்தல்.

(3) அறிக்கையிடப்பட்ட அரிசி இருப்புக் குறைவினை நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதால் இருப்பு அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமை.

(4) கூட்டுத்தாபனத்தின் வேறு களஞ்சியசாலைக்கு அவரை இடமாற்றஞ் செய்தல். (.........)

5. இருப்பு கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக பல நாட்கள் தொடர்ச்சியாக நெலும்வில களஞ்சியசாலையை மூடி வைப்பதற்கு ஏற்பட்டால் பிரதேசத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என்பதனால் அப்போது பிரதேசவாதிகளிடையே அமைதியின்மை ஏற்படுவதை தடுப்பதற்காக எடுக்கக்கூடிய சிறந்த படிமுறை என்ன?

(1) நெலும்வில களஞ்சியசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள தேசிய உணவு கூட்டுத்தாபனத்திற்குரிய களஞ்சியசாலையில் இருந்து நெலும்வில பிரதேசத்திற்கு இருப்பை வழங்குவதற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாகாண முகாமையாளருக்கு ஆலோசனையை விடுத்தல்.

(2) தலைமை அலுவலகத்தின் களஞ்சிய கட்டடத் தொகுதியில் இருந்து நெலும்வில பிரதேசத்திற்குத் தேவையான உணவை பகிர்ந்தளித்தல்.

(3) கூட்டுத்தாபனத்திலே பதிவு செய்து கொண்ட போக்குவரத்து ஒப்பந்தகாரர்களினது லொறியின் மூலம் நெலும்வில பிரதேசத்திற்கு உணவை வழங்குதல்.

(4) நெலும்வில பிரதேசத்திலுள்ள தன்னார்வ நிறுவன அலுவலர்களை தலைமைக் காரியாலயத்திற்கு அழைத்து ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக அறியக் கொடுத்தலும் ஊடக கலந்துரையாடலை மேற்கொள்ளலும். (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

● **6** தொடக்கம் **10** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் / விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

அரச முகாமைத்துவ திணைக்களத்தினது புதிய பணிப்பாளராக திரு. சுமனவீரபுத்திரன் நியமிக்கப்பட்ட பின்னர் திணைக்களத்தினது நிர்வாகம் மற்றும் அலுவலக முறைமைகளின் அமைப்பில் உள்ள தொழில் வரையறை குறைபாடுகளை தேடிக் கண்டு பிடித்தார். அவ்வாறு தேடிப்பார்க்கும் போது திணைக்களத்திலே அந்தந்த தொழிலுக்குரிய தொழில்விவரணம் தொழில்வரையறை என்பன தயாரிக்கப்படாது இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கேற்ப அந்தந்த தொழிலுக்குரிய கடமைகள், அந்த தொழிலைச் செய்வதற்காக நபருக்கு இருக்கக்கூடிய ஆகக்குறைந்த தகைமை அனுபவமும், பொறுப்பு கூறல், கடமை போன்றவற்றை உள்ளடக்கிய தொழில் விவரணம் மற்றும் தொழில் வரையறை என்பவற்றை தயாரிப்பதற்கான பொறுப்பு நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அங்கே அறிய கூடியதாய் இருந்தது என்னவெனில் நிர்வாக அலுவலர் பதவி வெற்றிடம் நிலவுவது என்பதாகும். அந்த வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவதற்கு தீர்மானித்த திரு. வீரபுத்திரன், திணைக்களத்தினது உள்ளக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய நிர்வாக அலுவலரின் பதவிக்கு பொருத்தமானவரை எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்வதற்கு தீர்மானித்தார்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

6. அரச முகாமைத்துவ திணைக்களத்திலே அந்தந்த தொழிலுக்குரியதாக தயாரிக்கப்பட்ட தொழில் விவரணத்தில் அடங்கியுள்ள விடயங்கள் இவற்றுள் எவை?

(1) தொழிலுக்குரிய கடமைகள்

(2) தொழிலுக்குரிய தகுதிகள்

(3) தொழிலுக்குரிய சம்பளத்திட்டம்

(4) தொழிலுக்குரிய திறமை (.........)

7. அரச முகாமைத்துவ திணைக்களத்திலே அந்தந்த தொழிலுக்குரியதாக தயாரிக்கப்பட்ட தொழில் வரையறையில் கண்டிப்பாக உள்ளடக்கப்படவேண்டிய விடயங்களாவன இவற்றுள் எவை?

(1) தொழிலுக்குரிய பொறுப்புகள்

(2) தொழிலுக்குரிய கடமைகள்

(3) தொழிலுக்குரியதாக இருக்க வேண்டிய ஆகக்குறைந்த அனுபவம்

(4) தொழிலுக்குரிய கடமைகளின் தன்மைகள் (.........)

[பக் 4 ஐப் பார்க்க.

8. நிர்வாக அலுவலர் பதவிக்கு நபரொருவரை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக உள்ளக ஆட்சேர்ப்பு முறைகளைக் கடைப்பிடித்தல் அரச முகாமைத்துவ திணைக்களத்துக்கு மிக முக்கியமாக அமைவது இவற்றுள் எந்தக் காரணங்களினாலாகும்?
   (1) ஆட்சேர்த்துக் கொள்வதற்காக அதிகமான செலவுகளை செய்வதற்கு இடமளிக்காமை
   (2) ஆட்சேர்த்துக் கொள்ளப்படுபவர் திணைக்களத்தினைப் பற்றி சரியான அறிவினைப் பெற்றிருத்தல்
   (3) திணைக்களத்தினுள் ஊழியர்களின் ஊக்குவிப்பு உயர்ந்து செல்லல்
   (4) திணைக்களத்தினுள் ஊழியர்களின் எதிர்ப்பு குறைவடைதல் (.........)

9. அரச முகாமைத்துவ திணைக்களத்தினர் நிர்வாக அலுவலர் பதவிக்கு பொருத்தமானவரை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்துவதன் மூலம் நடைபெறக்கூடிய நன்மை இவற்றுள் எது?
   (1) ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிக செலவையும் காலத்தையும் செலவிடாமை
   (2) விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பவசமாக ஏற்படக்கூடிய அழுத்தத்தை குறைத்தல்.
   (3) குறிப்பிட்ட நிலைமைகளுக்கு விண்ணப்பதாரிகள் முகங்கொடுக்கும் முறையை பரிசீலனை செய்ய முடியுமாயிருத்தல்.
   (4) விண்ணப்பதாரிகள் சம்பிரதாய முறைகளுக்கு அப்பாற் சென்று விடையை வழங்குவதற்கு ஊக்குவித்தல் (.........)

10. நிர்வாக அலுவலர் பதவிக்காகப் பொருத்தமானவரை சேர்த்துக் கொள்வதற்கான எழுத்துப் பரீட்சையை நடாத்துவதற்கு தீர்மானித்ததனால் திரு. வீரபுத்திரன் எதிர்பார்த்திருப்பது பின்வரும் எந்த விடயத்தினாலாகும்?
   (1) விண்ணப்பதாரிகளின் நிலைமைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகும்.
   (2) விண்ணப்பதாரிகளின் தனித்துவ பண்புகளை அறிந்து கொள்வதற்காகும்.
   (3) செலவு மற்றும் நேரத்தை இழிவாக்குவதற்காகும்.
   (4) தனிப்பட்ட தொடர்பு அல்லது தாக்கத்தை குறைத்துக் கொள்வதற்காகவாகும். (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

● **11** தொடக்கம் **15** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் /விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

அரசாங்கத்தினது சகல நிறுவனங்களுக்காகவும் தேவைப்படும் மோட்டர் வாகனங்களை இறக்குமதி செய்யும் முக்கிய அரச நிறுவனமாக வாகன அதிகாரசபை செயற்படுகின்றது. இந்த அதிகாரசபையிலே பிரதான மோட்டர் வாகன பிரிவின் காபட் செய்யும் செயற்திட்டமானது அதிகாரசபையினது கொள்ளல்குழுவினால் தாரா என்ட பிறைசஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தினது பிரதான மேற்பார்வைப் பொறுப்பு அதிகார சபையின் பணிப்பாளர் (தொழில்நுட்ப) திரு. அசூர் முகமட்டிடம் கடமை நிமித்தமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிய செயற்திட்டத்திற்காக தாரா என்ட பிறைசஸ் நிறுவனத்தினது பொறுப்பாளர் மற்றும் வாகன அதிகார சபையினது தலைவர் ஆகியோரினால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோடு செயற்திட்டம், நிர்மாணம் மற்றும் பயிற்சியளிக்கும் அபிவிருத்தி நிறுவனத்தினது (ICTAD) சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் உள்ளது.

மேலும் ஒப்பந்தத்தின் வாசகத்தின் கூற்றுக்கமைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாள் தொடக்கம் 14 நாட்களுள் பிரிவுக்கு காபட் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் முழுச் செயற்திட்டமும் 3 மாத காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாள் தொடக்கம் 02 நாட்களுள் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள் வாகன அதிகார சபையின் இடத்திற்கு கொண்டுவரப்பட்டு அவை தாரா என்டபிறைசஸ் நிறுவனம் மூலம் பிரிவுக்கு காபட் செய்யும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 02 கிழமைகளின் பின்னர் இயந்திர உபகரணங்கள் அவ்வாறே இருந்ததோடு தாரா என்டர் பிரைசஸ் நிறுவனத்தினது சிற்றூழியர்களோ அல்லது வேலையை மேற்பார்வை செய்யும் எவருமோ செயற்திட்ட பிரதேசத்திற்கு வராது இருந்ததோடு செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்த தன்மையைக் காணக்கூடியதாய் இருந்தது.

காரியத்திறனற்ற அலுவலராக அதிகாரசபையினுள் பிரபல்யமான திரு. அசூர் முகமட் இந்த நிலைமை தொடர்பாக தெளிவைக் கொண்டிராததோடு அதனால் மேல் முகாமைத்துவத்தினருக்கு நிலைமையின் அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. மேலும் 02 கிழமையின் பின்னர் பிரதேசத்தில் பருவமழையுடன் கூடிய காலநிலை மாற்றம் விருத்தியடைந்திருந்தது.

இவற்றினிடையே அதிகார சபையினது வேலை நாள் ஒன்றாக இல்லாத சனிக்கிழமையொன்றில் அறிவித்தல் வழங்காது தாரா என்டர் பிறைசஸ் நிறுவனத்தினரால் செயற்திட்ட பூமியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இருந்த இயந்திர உபகரணங்கள் சகலதும் வாகன அதிகார சபை சுற்றுப்பகுதியில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்ததாக மீண்டும் அதிகார சபையினது கடமைகள் ஆரம்பமாகும் திங்கட்கிழமை காலையிலே அவதானிக்க முடிந்தது. இது தொடர்பாக வாகன அதிகார சபையின் பாதுகாப்பு பிரிவுக்கு தெரியாது இருந்தமை விசாரிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

[பக் 5 ஐப் பார்க்க.

11. வாகன அதிகார சபையினது மோட்டார் வாகன பிரிவுக்கு காபட் இடப்பட்டு தயாரிக்கும் செயற்திட்டத்தினது வேலைகள் நிறுத்தப்பட்டமை சரியான முறையில் அறிக்கை **இடப்படாமைக்குப்** பிரதான காரணம் இவற்றுள் எது?

(1) வாகன அதிகார சபையினது தலைவரினது முகாமைத்துவ குறைபாடு

(2) வாகன அதிகாரசபையினது பணிப்பாளரினது (தொழில்நுட்ப) மேற்பார்வையின் குறைபாடு

(3) தாரா என்டர் பிறைசஸ் நிறுவனத்தினது முகாமைத்துவ குறைபாடு

(4) வாகன அதிகார சபையினது கொள்ளல் குழுவினது குறைபாடு (.........)

12. தாரா என்டர் பிறைசஸ் நிறுவனத்தினால் ஒப்பந்தம் கைவிடப்பட்டு செயற்திட்டத்தினது வேலைகள் செய்து முடிக்காது இருப்பதற்கு தயாராக காணப்படுவதாக பணிப்பாளருக்கு (தொழினுட்பம்) அறிய முடிந்திருந்தால் அவரினால் எடுத்திருக்கக்கூடிய சிறந்த படிமுறை யாது?

(1) உரிய நிறுவனத்தினது உரிமையாளரை அழைத்து உடனடியாக வேலையை ஆரம்பிக்குமாறு உத்தரவிடுதல்.

(2) அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அரச நிதி மோசடி செய்தமை தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு எதிராக முறைப்பாட்டை மேற்கொள்ளல்.

(3) வேறு நிறுவனம் ஒன்றிற்கு உரிய செயற்திட்டத்தை ஒப்படைத்தல்.

(4) வாகன அதிகார சபையினது தலைவர் உட்பட உயர்ந்த முகாமைத்துவத்தினருக்கு நிலைமைகளை அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை வேண்டி நிற்றல். (.........)

13. தாரா என்டபிறைசஸ் நிறுவனத்தினரால் ஒப்பந்தம் கைவிடப்பட்டு செயற்திட்டத்தில் இருந்து வெறியேறியுள்ளது என அறிந்து கொண்டால் உடனடியாக வாகன அதிகார சபையினது உயர் முகாமைத்துவத்தினரால் உரிய நிறுவனம் தொடர்பாக கீழேயுள்ள எந்த படிமுறையை எடுக்க முடியும்?

(1) உரிய நிறுவனத்தினால் செயற்திட்டத்தை நிறுத்துவது தொடர்பாக நிர்மாணித்தல் மற்றும் பயிற்சியளித்தல் அபிவிருத்தி நிறுவனத்தினை அறிவுறுத்துவதுடன் அது தொடர்பான பரிசீலனை செய்ய வேண்டுதல்.

(2) நிர்மாணித்தல் மற்றும் பயிற்சியளித்தல் அபிவிருத்தி நிறுவனத்தினை பதிலாக செயற்திட்டத்திற்காக வேறு நிறுவனத்தைப் பெயரிடுமாறு வேண்டுதல்.

(3) நிர்மாணித்தல் மற்றும் பயிற்சியளித்தல் அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து அந்நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் பெயர்ப்பட்டியலை கோரிப் பெற்று வேறு பொருத்தமான நிறுவனமொன்றை செயற்திட்டத்திற்காக தெரிவு செய்தல்.

(4) நிர்மாணித்தல் மற்றும் பயிற்சியளித்தல் அபிவிருத்தி நிறுவனத்தினால் செயற்திட்ட வேலைகளை நிறைவுறுத்த நடவடிக்கை எடுத்தல். (.........)

14. செயற்திட்டத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் தாரா என்டர் பிறைசஸ் நிறுவனத்தினரால் அறிவிக்காது எடுத்து செல்லப்பட்டது தொடர்பாக நேரடியான பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் யார்?

(1) வாகன அதிகார சபையினது தலைவர்

(2) வாகன அதிகார சபையினது கொள்ளல் குழு

(3) வாகன அதிகார சபையினது பாதுகாப்பு பிரிவு

(4) வாகன அதிகார சபையினது பணிப்பாளர் (தொழிநுட்ப பிரிவு) (.........)

15. வாகன அதிகார சபையினது மோட்டர் வாகன தரிப்பிடத்திற்கு காபட் இடுவதற்காக கொண்டுவரப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் சுற்றப்புற சூழலில் இருந்து எடுத்துச் சென்றமை தொடர்பாக வாகன அதிகார சபையினரால் உடனடியாக எடுக்க வேண்டிய சிறந்த படிமுறை யாது?

(1) உரிய நிறுவனத்தினது உரிமையாளரை அழைத்து இயந்திர உபகரணங்களை உடனடியாக கொண்டுவந்து செயற்திட்டத்தினது வேலைகளை ஆரம்பிக்குமாறு உடனடியாக உத்தரவிடுதல்.

(2) அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திலே இயந்திர உபகரணங்களை எடுத்துச் சென்றமை தொடர்பாக முறைப்பாட்டைப் பதிவு செய்தல்.

(3) வேறு நிறுவனத்தில் இருந்து இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டு அதிகார சபையினது ஊழியர்களைக் கொண்டு செயற்திட்டத்தை நிறைவு செய்தல்.

(4) நிறுவனத்தினால் எடுத்துச் செல்லப்பட்ட இயந்திர உபகரணங்களை பொலிசாரின் உதவியுடன் பெற்றுக் கொண்டு குறைந்த பலத்தினைப் பிரயோகித்து மீண்டும் அதிகார சபையினது சுற்றுப் புறத்திற்கு எடுத்துச் கொண்டு வருதல். (.........)

*( 01 × 5 = 05 புள்ளிகள்)*

[பக் 6 ஐப் பார்க்க.

● **16** தொடக்கம் **20** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் /விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

தேசிய போசணை கூட்டுத்தாபனம் நாடு பூராகவும் உள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்காக போசணைமிக்க உணவுகளை பகிர்ந்தளிக்கும் முக்கிய அரசாங்க நிறுவனமாகும். ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு தடவை நாடு பூராகவும் அமைந்துள்ள 15 000 பாடசாலைகளுக்கு இந்த போசணை மிக்க உணவுகளை பகிர்ந்தளிப்பது லொறிகளின் மூலம் செய்யப்படுகின்றது. இதற்காக தனியார் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் 100 பேர் அளவில் கூட்டுத்தாபனத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு. விசாகப் பெருமாள் இந்தக் கூட்டத்தாபனத்தினது போக்குவரத்து முகாமையாளராவார். கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்து பிரிவினது தலைவரான அவர் எப்போதும் தான் "சரியானவர்" என்ற எண்ணத்துடன் இருப்பதுடன் "தனக்கு மட்டும் இவற்றைச் செய்து முடிக்க முடியும்" என்ற எண்ணக்கருவுடன் இருந்தார். அவ்வாறே அசாதாரண அதிகார பலத்துடன் தனது கோட்பாட்டுடன் இருந்த திரு.விசாகப் பெருமாள் போக்குவரத்துப் பிரிவினது பிரதி முகாமையாளரருக்கோ அல்லது உதவி முகாமையாளருக்கோ அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதைச் செய்யாது இருந்தார்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

16. தேசிய போசணைக் கூட்டுத்தாபனத்தின் போசாக்கான உணவை பகிர்ந்தளிப்பதற்காக போக்குவரத்து ஒப்பந்தகாரர்கள் 100 பேர் அளவில் பதிவு செய்து கொண்டிருப்பதனால் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கக்கூடிய நன்மை ஒன்றாக அமைவது இவற்றுள் எது?
    (1) அதிகளவான லொறிகள் பயணிக்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்க முடிதல்.
    (2) மிகவும் செயற்றினுடன் போசணைமிக்க உணவுகளை வழங்குவதற்கு முடிதல்.
    (3) போக்குவரத்து துறையில் தொழில் வாய்ப்புகள் பலவற்றை வழங்குவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கல்.
    (4) அரச கூட்டுத்தாபனத்துள் மிகவும் சிறந்த போக்குவரத்து கோலத்தை உருவாக்கல். (.........)

17. ஒரு போக்குவரத்து ஒப்பந்தகாரர் மட்டும் தேசிய போசணை கூட்டுத்தாபனத்திலே பதிவு செய்திருந்தால் குறித்த சந்தர்ப்பமொன்றிலே கூட்டுத்தாபனம் முகங் கொடுப்பதற்கு நேரிடும் பிரச்சினையாவது இவற்றுள் எது?
    (1) தனியுடமை இருப்பதனால் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் போசணை உணவின் போக்குவரத்திற்கு தடங்கல் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் கூடுதலாகக் காணப்படல்.
    (2) ஏனைய போக்குவரத்து ஒப்பந்தகாரர்கள் குற்றச்சாட்டுக்கு கூட்டுத்தாபனம் உட்படல்.
    (3) கூட்டுத்தாபனத்தினது பணமானது ஒரு நிறுவனத்திற்கு அனுப்பப்படுவது தொடர்பாக கணக்காய்வு விசாரணைகளுக்கு தொடர்ந்து முகங் கொடுக்க ஏற்படும்.
    (4) போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களினால் கூட்டுத்தாபனத்தின் உயர் முகாமைத்துவத்தினருக்கு நெருக்குதல்கள் ஏற்படல். (.........)

18. திரு.விசாகப்பெருமாளினது முகாமைத்துவ பாணி அறியப்படுவது எவ்வாறாகவாகும்?
    (1) சுதந்திர பாணி (2) ஆக்கிரமிப்பு பாணி
    (3) சுயாதீன பாணி (4) சனநாயகப் பாணி (.........)

19. திரு.விசாகப் பெருமாளினது முகாமைத்துவ பாணியின் மூலம் தேசிய போசணை கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கக்கூடிய நன்மையாக அமைவது இவற்றுள் எதுவாகும்?
    (1) தொழில் தேர்ச்சியுள்ள போக்குவரத்துப் பிரிவினது ஊழியர்களுக்கு கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திக்காக பங்களிப்பு செய்ய சந்தர்ப்பத்தை வழங்குதல்.
    (2) போக்குவரத்துப் பிரிவு தொடர்பாக முடிவெடுக்கும் போது பரந்த துறையினரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்
    (3) போக்குவரத்துப் பிரிவின் கீழ்மட்ட ஊழியர்களின் செயற்றிறன் பங்களிப்பு கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களில் அந்த பங்களிப்பை இலகுவாகப் பெற முடிவது
    (4) போக்குவரத்துப் பிரிவினரது நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக ஊழியர்களின் ஈடுபாட்டைக் காட்டும் பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடிவது. (.........)

20. திரு. விசாகப் பெருமாளினது முகாமைத்துவ பாணியினது பெறுபேறாக போக்குவரத்து துறையினுள் காணக்கூடியதான பண்பாக அமைவது இவற்றுள் எதுவாகும்?
    (1) போக்குவரத்துப் பிரிவின் மூலம் எடுக்கப்படும் முடிவுகள் தரமுள்ளதாகக் காணப்படல்.
    (2) போக்குவரத்து பிரிவினது ஊழியர்களின் திறமையை சரியான முறையில் வெளிக் கொண்டுவருவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குதல்.
    (3) போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக போக்குவரத்துப் பிரிவினது ஊழியர்களிடையே சிறந்த எண்ணக்கருவை ஏற்படுத்துதல்.
    (4) போக்குவரத்து பிரிவினுள் வேறாகத் தெரிகின்ற செயற்பாட்டை இல்லாது செய்தல். (.........)

*(01 × 5 = 05 புள்ளிகள்)*

[பக் 7 ஐப் பார்க்க.

● **21** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் /விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

திரு. சுந்தர சேகரன் அவர்கள் கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகார சபையினது தலைவராவதோடு செயற்பாட்டு பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபையின் மூலம் அதிகார சபையை நிர்வகிக்கும் நடைமுறையில் ஈடுபட்டார்.

கிராமிய பிரதேசங்களின் அடிப்படை வசதிகளின் அபிவிருத்தியை முதன்மைமையாகக் கொண்ட இந்த பணிப்பாளர் சபையினால் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகார சபையினது தொலைநோக்கு, செயற்பணி மற்றும் இலக்குகளும் குறிக்கோள்களும் நிச்சயிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை மேலும் நிச்சயப்படுத்துதல், ஒருங்கிணைத்தல் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்காக கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகார சபை மேல், நடுத்தர. கீழ்மட்ட முகாமைத்துவ அலுவலர் பலரை இணைத்துக் கொண்டுள்ளது. தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களைப் போன்று பொது முகாமையாளர்கள் பிரிவுக்குப் பொறுப்பான முகாமையாளர் உதவி முகாமையாளர்கள் வேலை நிபுணத்துவர்கள் போன்ற அலுவலர்களும் அங்கு உள்ளனர்.

அரசாங்கத்தினால் கிராமிய பாலம் மற்றும் மதகுகளை புனரமைத்தல் தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலின் பொறுப்பு கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய எதிர்வரும் ஐந்து ஆண்டுகளினுள் கிராமிய பாலம் மற்றும் மதகுகள் சகலவற்றையும் புனரமைத்து செய்து முடிப்பதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நடைமுறைச் சாத்தியமாகவும் குறிப்பிட்ட இலக்கிற்குரிய கால எல்லையிலே நிறைவு செய்வதற்காகவும் அதிகார சபையினது சகல முகாமையாளர் மட்டங்களிலும் இணைக்கப்பட்டு கடமையாற்றும் அலுவலர்களின் திறன் விருத்தியினைச் செய்வதற்கு விசேட வேலைத்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இங்கே அந்த அலுவலர்களினது எண்ணக்கருவாக்கம் தனியாள் தன்மை, நியாயத்தன்மை, பகுப்பாய்வு தன்மை மற்றும் தொழில்நுட்பம் போன்ற திறமைகளை விருத்தி செய்வதற்காக பயிற்சி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அந்தந்த முகாமைத்துவ மட்டங்களுக்காக மிகவும் முக்கியமானதும் அதிகமாக தேவைப்படுவதுமான திறமையை இனங்கண்டு அந்த அலுவலர்களுக்கு தேவையான அந்த திறமைகளை விருத்தி செய்வதற்கு கூடிய கவனம் செலுத்தப்படும்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான விடையை புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

21. அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினது முகாமைத்துவ மட்டத்தை வகைப்படுத்தும் போது திரு. சுந்தர சேகரன் அவர்கள் எந்த முகாமைத்துவ மட்டத்திற்கு உட்பட்டவர்?

.....................................................................................................................................

22. அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினது வேலை மேற்பார்வையாளர்கள் உள்ளடங்குவது எந்த முகாமைத்துவ மட்டத்திற்காகும்?

.....................................................................................................................................

23. அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினது இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் செயற்பாடுகள் அமைவது எந்த மட்டத்திற்குரிய முகாமையாளரினாலாகும்?

.....................................................................................................................................

24. அடிப்படை வசதிகள் அபிவிருத்தி புலத்திற்கு உரித்தாக ஏற்படும் புதிய தொழில்நுட்ப வேறுபாட்டை தேடிப்பார்த்தல் ஆகியன தொடர்பாக தினமும் அவதானித்துக் கொண்டு இருப்பது எந்த மட்டத்திற்குரிய முகாமையாளரினாலாகும்?

.....................................................................................................................................

25. திரு. சுந்தரசேகரினிடம் அதிகளவு இருக்க வேண்டியது எந்த திறமையாகும்?

.....................................................................................................................................

26. பகுப்பாய்வு திறமை அதிகளவில் இருக்க வேண்டியது கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகார சபையினது எந்த மட்ட முகாமைத்துவமாகும்?

.....................................................................................................................................

27. கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகார சபையினது வேலை மேற்பார்வையாளர்களிடம் அதிகளவு இருக்க வேண்டியது எந்த திறமையாகும்?

.....................................................................................................................................

28. எதிர்வரும் ஐந்தாண்டுகளில் கிராமிய பாலம் மற்றும் மதகுகள் சகலவற்றையும் புனரமைத்து நிறைவு செய்வதற்காக கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டத்தை தயாரிக்கும் பொறுப்பு வழங்கப்படுவது எந்த மட்டத்திற்குரிய முகாமைத்துவத்திடமாகும்?

.....................................................................................................................................

[பக் 8 ஐப் பார்க்க.

29. அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கான திட்டம் செயல்முறையாக நடைமுறைப்படுத்தும்போது கூடியளவு பொறுப்புக் கூற வேண்டியிருப்பது எந்த மட்ட முகாமையாளர்களுக்காகும்?

..........................................................................................................................................

30. கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் வேலை மேற்பார்வையாளர்களின் கூடியளவு தொடர்பினைக் கொண்டிருப்பது எந்த மட்ட முகாமையாளருடனாகும்?

..........................................................................................................................................

*( 01 × 10 = 10 புள்ளிகள்)*

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் /விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் சக்தி நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் மாற்று சக்தியை மக்களுக்கு அறிமுகஞ் செய்வதற்கும் மற்றும் மாற்று சக்தி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தலுக்குமாக அரசாங்கத்தினால் மாற்று சக்தி அதிகார சபை நிறுவப்பட்டுள்ளது. சக்தியை சேமிப்பதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அதிகார சபையினது இலாப பங்களிப்பு நிலைமையை விருத்தி செய்தல் மற்றும் முதலீடுகளின் நீண்ட கால பெறுமதியினை அதிகரித்தல் மாற்று சக்திப்புலத்திலே தொழிலை உருவாக்குதல் போன்றன மாற்று சக்தி அதிகார சபையினது இலக்காக அமைவதோடு எதிர்வரும் வருடங்களில் அதிகார சபையினது மாற்று சக்தி உற்பத்தியானது அடுத்த வருடத்தில் 10% அடுத்த பத்து வருடங்களில் 50% உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரசபையினது கடந்த வருடாந்த அறிக்கைக்கு ஏற்ப அதிகார சபையின் மூலம் நிறுவப்பட்டுள்ள மாற்று சக்தி நிலையங்களின் உற்பத்தி செலவை குறைந்த இலாபத் தன்மை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அந்த மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள உள்ளீடுகளை விட வெளியீடுகள் அதிகரித்துள்ளன. மேலுள்ள பெறுபேறுகள் மற்றும் தகவல்களினூடாக மாற்று சக்தி அதிகார சபை எந்தளவுக்கு எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்துள்ளது என்பதை நிச்சயித்து கொள்ளலாம்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் மாற்று சக்தி அதிகாரசபையினது வினைத்திறமையினைக் (Efficiency) குறிப்பிடும் பிரமாணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................

(ii) ..........................................................................................................................

32. மாற்று சக்தி அதிகார சபையினது நீண்டகால இலக்குகள் (Aims) **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................

(ii) ..........................................................................................................................

33. மாற்று சக்தி அதிகார சபையினது உற்பத்தித்திறன் (Productivity) அதிகரிக்கப்பட்டு காணப்படுகிறது என்பதை உறுதி செய்யக்கூடிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................

(ii) ..........................................................................................................................

34. மாற்று சக்தி அதிகார சபையினது சமூகம் சார்ந்த இலக்குகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................

(ii) ..........................................................................................................................

35. மாற்று சக்தி அதிகார சபையினது குறிக்கோள்கள் (Goals) **இரண்டை**க்குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................

(ii) ..........................................................................................................................

*( 02 × 5 = 10 புள்ளிகள்)*

[பக் 9 ஐப் பார்க்க.

● **36** தொடக்கம் **40** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் /விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

சுதந்தர வர்த்தக சபையானது சுந்தர பிரதேசத்தினது சிறு மற்றும் மத்தியளவிலான வியாபாரிகளினது வர்த்தக நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான வர்த்தக பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கும் நிறுவனமொன்றாகும்.

இந்த சபைக்கு கள அலுவலர்கள் 75 பேரளவில் இணைக்கப்பட்டு கடமையாற்றுவதோடு சபையினது தலைவராக நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.கேசவ சிறிதரன் ஈடுபடுகிறார்.

திரு.கேசவ சிறிதரன் தனது அலுவலகக் குழுவினரை சரியான முறையில் வழிகாட்டல், நிர்வகித்தல் மற்றும் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கு பல்வேறு உபாய முறைகளைப் பயன்படுத்துகிறார். அலுவலர்களின் கூட்டம், முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கான கூட்டங்கள் கூட்ட அறிக்கைகளை தயாரித்தல், உள்ளக அலுவலக உத்தரவுகளைப் பிறப்பித்தல், மற்றும் முயற்சியாளர்களின் கூட்டங்களை நடாத்தல் என்பன அவற்றுள் சிலவாகும். இந்தக்கூட்டங்களிடையே முன்னேற்றங்களை ஆராய்தல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தினை மாதாந்தம் நடாத்துவதோடு அதற்கான அழைப்பினை கையடக்கத்தொலைபேசிமூலம் குறுந்தகவல்கள் மூலம் அனுப்புவார். அதற்கேற்ப செய்யப்படும் அறிவித்தலுக்கேற்ப கடந்த யூன் மாதத்திலே முன்னேற்ற மீளாய்வு கூட்டத்திற்கு களஅலுவலர்கள் 75 பேரும் கலந்து கொண்டனர்.

2014.07.07 ஆந் திகதி சுதந்தர வர்த்தக சபையினது திட்டமிடல் பிரிவினால் பிரதேசத்தின் பெண் வர்த்தகர்கள் 100 பேர் கலந்து கொண்ட பயிற்சி வேலை செயலமர்வு சபையினது கேட்போர் கூடத்திலே நடைபெற்றது. இந்த செயலமர்விற்கு பெண் வர்த்தகர்கள் 100 பேர் அழைப்புக் கடிதம் மூலம் அழைக்கப்பட்டிருந்தனர்.

திரு.கேசவ சிறிதரனுக்கு மிகவும் நெருக்கமானவர் என அலுவலர் குழுவினரால் கருதப்பட்டுவந்த சபையினது பெண் எழுதுனரான திருமதி கீர்த்தனா பகவதி என்பவர் இந்த செயலமர்வின் பகல் இடைவேளையின் பின்னர் திரு. சிறிதரனின் அலுவலக அறைக்கு வருகை தந்து செயலமர்வில் கலந்து கொண்டிருந்த பெண்கள் சிலரும் மற்றும் அலுவலக பெண் எழுதுவினைஞர்கள் மூவர் இடையே வாய்த்தர்க்கம் நடைபெறுவதாக இரகசியமாக கூறிவிட்டு அறையில் இருந்து வெளியே சென்றார். திருமதி கீர்த்தனா பகவதி இந்த சம்பவம் தொடர்பாக அறிந்து கொண்டிருப்பது செயலமர்வில் கலந்து கொண்ட பெண்களினால் செய்யப்பட்ட அறிவித்தலுக்கு ஏற்பவாகும்.

செயலமர்வு நிறைவடைந்த பின்னர் திரு.சேகவ சிறிதரனிடம் வருகை தந்து செயலமர்வில் கலந்து கொண்ட சில பெண்களினால் திரு. சிறிதரனிடம் விடயங்களைக் குறிப்பிட்டு எழுத்து மூல முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது மதிய உணவைப் பெறச்சென்றபோது சபையினது மூன்று பெண் எழுதுனர்கள் தமது குழுவினரைப் பார்த்து ஏளனமாக சிரித்தமை அது தமது சுய கௌரவத்தை பாதித்திருந்ததாகவும் அப்போது இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என உரிய பெண்கள் அந்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையை புள்ளிக் கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

36. சுந்தர வர்த்தக சபையிலே முறையான எழுத்து மூல தொடர்பாடல் முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................

(ii) ..............................................................

37. வாய்மூலமற்ற தொடர்பாடலுக்கான உதாரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................

(ii) ..............................................................

38. இந்த சம்பவத்தில் முறைமையற்ற தொடர்பாடல் முறையொன்று நடைபெற்ற **இரு** சம்பவங்களைக் குறிப்பிடுக.

(i) ..............................................................

(ii) ..............................................................

39. சுந்தர வர்த்தக சபையிலே தொடர்பாடல் கடமைகள் நல்ல முறையில் நடைபெறுகின்றது என்பதற்கு உதாரணங்கள் **இரண்டை** முன் வைக்குக.

(i) ..............................................................

(ii) ..............................................................

40. சுந்தர வர்த்தக சபையிலே கூட்டுமுறையான தொடர்பாடல் கடமைகள் நடைபெற்ற **இரு** சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.

(i) ..............................................................

(ii) ..............................................................

*( 02 × 5 = 10 புள்ளிகள்)*

[பக் 10 ஐப் பார்க்க.

● **41** தொடக்கம் **45** வரையிலான வினாக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சம்பவம் /விடயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

நட்டத்தை அடைகின்ற அரச கூட்டுத்தாபனங்களாகக் கருதப்படும் அரச இயந்திர உபகரண கூட்டுத்தாபனத்தை மீளக் கட்டியெழுப்புவதன் மூலம் அரசுக்கு சுமையற்ற நிறுவனமொன்றாக அமைத்துக் கொள்வதற்காக புதிய முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த சபையின் மூலம் கூட்டுத்தாபனத்தின் பின்னடைவு மற்றும் சக்திகளை இனங்கண்டு நிறுவனத்தின் அபிவிருத்திக்கு காணப்படும் பாதிப்புகளை இனங்கண்டு விசேட வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. அப்போது இயந்திர உபகரணங்களின் புலத்திலே தனியார் நிறுவனங்கள் கைப்பற்றியுள்ள புதிய தொழில்நுட்ப போக்கு காரணமாக அரச இயந்திர கூட்டுத்தாபனத்தினது உற்பத்திகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக நுகர்வோரின் சாதகமான மனப்பாங்கு இல்லை என்பது புலனாகின்றது. இந்த நிலைமையை நன்றாகப் புரிந்து கொண்டும், கூட்டுத்தாபனத்தின் முன் அனுபவம். வெளிச்சுற்றாடல் என்பவற்றை விளங்கிக் கொண்டும், கூட்டுத்தாபனத்திற்கான திறமுறை திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக முகாமைத்துவ சபை தீர்மானித்திருந்தது. அங்கே கூட்டுத்தாபனத்தினது எதிர்காலத்தை கருத்திற் கொண்டு கூட்டுத்தாபனத்திடம் உள்ள வளங்களின் உற்பத்திதிறனை அதிகரித்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் / விடயம் தொடர்பாக கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையை புள்ளிக் கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

41. அரச இயந்திர உபகரண கூட்டுத்தாபனம் முகங்கொடுத்துள்ள சவாலை வெற்றி கொற்வதற்காக அதன் உள்ளக சுற்றாடலை ஆய்வு செய்வதற்குரிய காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

42. அரச இயந்திர உபகரண கூட்டுத்தாபனத்தின் வெளிச் சுற்றாடலினால் தூண்டப்படும் அழுத்தங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

43. திறமுறை திட்டமிடல், அரச இயந்திர உபகரண கூட்டுத்தாபனத்துக்கு முக்கியத்துவமாவதற்குரிய **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

44. அரச இயந்திர உபகரண கூட்டுத்தாபனம் மூலம் தயாரிக்கப்பட்ட திறமுறைத் திட்டத்தை தயாரிக்கும் போது கவனத்திற்கு உட்படுத்த வேண்டிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

45. அரச இயந்திர உபகரண கூட்டுத்தாபனம் மூலம் தயாரிக்கப்பட்ட திறமுறைத் திட்டத்திலே உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

## பகுதி II

*( 02 × 5 = 10 புள்ளிகள்)*

● கீழே தரப்பட்ட சம்பவம்/விடயத்தை வாசித்து **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக **கொடுக்கப்பட்டுள்ள கடதாசியைப்** பயன்படுத்துக.

சந்த மரதன் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திரு. விபுலன் கருணாகரன் அவர்கள் 2014.01.31 ஆந் திகதி ஓய்வு பெற்றுச் சென்றார். 10 வருடங்களுக்கு அதிகமான காலமாக சந்தமரதன் பிரதேச செயலாளராக கடமையாற்றியிருந்த திரு. விபுலன் கருணாகரனின் கடமை தொடர்பாக சந்த மரதன் பிரதேச செயலாளர் பிரிவினது மக்களிடையேயும் பெரும்பான்மையான அலுவலக குழுவினரிடையேயும் அதிருப்தி காணப்பட்டது.

தமது கடமைகளை விட தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு முன்னுரிமையை பெற்றுக் கொடுத்த அலுவலராகவும் அலுவலகர் குழுவிலே தெரிவு செய்யப்பட்ட அலுவலக குழுவினருக்கு மட்டும் பக்கச் சார்பாக செயற்படல் மற்றும் அலுவலகர் குழுவினருக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு முடியாத அலுவலர் ஒருவராக திரு.விபுலன் கருணாகரன் அறியப்பட்டிருந்தார்.

[பக் 11 ஐப் பார்க்க.

திரு.விபுலன் கருணாகரன் ஓய்வை பெற்றுச் சென்றவுடன் திரு. மதுரன் சமரசேகரன் அவர்கள் சந்தமரதன் பிரதேச செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பிரதேச செயலாளரின் அலுவலகங்கள் சிலவற்றில் பிரதேச செயலாளராக கடமையாற்றியிருந்த திரு. மதுரன் சமரசேகரன் அவர்கள் அந்த அலுவலக மக்கள் சேவைகள் மூலம் சிறந்த அலுவலராக இயங்குவதற்கான பங்களிப்பை வழங்கிய புகழ்மிக்க அரச அலுவலர் ஒருவராவர்.

விசேடமாக உற்பத்தித்திறன் வினைத்திறமை, குழுவேலை, நேரமுகாமைத்துவம், பஞ்சவித எண்ணக்கருக்கள் போன்ற எண்ணக்கருக்களை செயல்முறை ரீதியாக செயற்படுத்தி நடைமுறைப்படுத்துவதில் மிகவும் திறமை வாய்ந்த அலுவலர் ஒருவராக திரு. மதுரன் சமரசேகரனின் புகழ் புலத்திலே காணப்பட்டது.

சந்தமரதன் பிரதேச செயலாளர் அலுவலகத்திலே அலுவலராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற திரு. மதுரன் சமரசேகரனுக்கு அலுவலகத்தினது பௌதீகச் சூழல் மிகவும் அருவருப்பாக இருந்ததுடன் சேவையை பெறுவதற்கு வருகை தரும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமையும் அவதானிக்கப்பட்டது.

அலுவலகத்தினது கிளைகள் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக சரியான மேற்பார்வை இல்லாமை, அலுவலர்களிடையே அதிகாரங்கள் சரியாகப் பகிரப்படாமை, அன்றாட தபால்கள், கடித கோப்புகள் போன்ற நடவடிக்கைகளுக்காக முறையான அலுவலக முறையை கடைப்பிடிக்காமையினால் அலுவலக நடைமுறைகள் மற்றும் சேவைகள் மெதுவாக நடைபெறுவதை திரு.மதுரன் சமரசேகரனினால் அவதானிக்க முடிந்தது. அவ்வாறே சந்தரமரதன் பிரதேச செயலாளர் அலுவலகத்திலே பல்வேறு பதவிகளுக்கான வெற்றிடங்கள் அதிகம் காணப்பட்டாலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக எதுவித முயற்சியும் எடுக்கப்படாமை தெளிவாகிறது. அவ்வாறே பிரதேசத்தில் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களினது அலுவலர்களுடன் ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் தொடர்புகளையும், இணைப்புகளையும் பேணி வராமையினால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாக அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சந்தமரதன் பிரதேச செயலாளரின் அலுவலகத்தினது இந்த மோசமான நிலைமைகளை உடனடியாக மாற்றுவதற்கு திரு. மதுரன் சமரசேகரனால் தான் பயின்றிருந்த எண்ணக்கருக்களை பிரயோசனப்படுத்தி பொதுமக்களுக்கும் அலுவலர்களுக்கும் ஒழுங்கான அலுவலக தளக் கோலத்தை தயாரிப்பதற்கும் அலுவலர் குழுவினரது நேர் மனப்பாங்கு விருத்திக்கு பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். இதற்கு மேலதிகமாக பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண ஒதுக்கங்களைப் போல் மாவட்ட செயலாளரினூடாக ஒதுக்கங்களை பெற்றுக் கொண்டு அலுவலக பௌதிக சூழலை அபிவிருத்தி செய்வதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டன. அவ்வாறே சரியாக ஒழுங்கமைப்புகளைப் பயன்படுத்தியும் திட்டமிடல் இன்றிக் காணப்படும் அலுவலக நடைமுறைகளை சிறந்த ஒழுங்கமைப்பினூடாகவும் சரியான திட்டமிடலுடனும் நடைமுறைப்படுத்துவதற்கு கிளை மட்டங்களில் விசேட வேலைத்திட்டங்கள் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த செயற்பாடுகளினூடாக குறுகிய காலத்தினுள் சந்தமரதன் பிரதேச செயலாளர் அலவலகத்தை வேகமாகவும் காரியத்திறமையுடனும் கொண்டுள்ள சிறந்த அலுவலகச் சூழலொன்றை அமைக்க முடிந்துள்ளது. அவ்வாறே அலுவலகக் குழுவின் அலுவலர்கள் பலரினது அதிக உற்சாகம் மற்றும் ஈடுபாட்டினை நடாத்திச் செல்வதற்குத் தெரிந்து கொண்டார்.

சந்த மரதன் பிரதேச செயலாளர் அலுவலகத்திலே இந்த மாற்றங்களை ஏற்படுத்தும்போது அதற்கு ஈடுபடாத செயல் திறமையற்ற அலுவலகர் சிலரினை வேறு கிளைகளுக்கு மாற்றம் செய்வதற்கு திரு. மதுரன் சமரசேகரன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அந்த கிளைகளுக்கு மாற்றிய சில அலுவலர்களிடையே திரு.சந்தன மங்கள வீரனும் ஒருவராவர். சந்தனமரதன் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு நிதி உதவியாளராக கடமையாற்றிய திரு. சந்தன மங்களவீரன் அவர்கள் ஓய்வுபெற்ற பிரதேச செயலாளரான திரு.விபுலன் கருணாகரனுக்கு மிக நெருங்கிய அலுவலராவர். அவர். திரு மதுரன் சமரசேகரனினால் செய்யப்படுகின்ற சகல கடமைகளையும் விமர்சனம் செய்வதுடன் காரியத் திறமையுடன் கடமையாற்றும் அலுவலர்களுக்கும் அழுத்தங்களையும் அச்சுறுத்தலையும் செய்து கொண்டு நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தார். அத்துடன் நின்று விடாது அவர் திரு.மதுரன் சமரசேகரனுக்கு எதிராக பெயரிடப்படாத முறைமையற்ற கடிதமொன்றை (பெட்டிசனை) அரச சேவை விசாரணை நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அனுப்பியிருந்தார். அதற்கமைய அரச சேவை விசாரணை நிறுவனப் பணிப்பாளரினால் திரு. மதுரன் சமரசேகரனின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை ஒன்றை நடாத்தி அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

46. திரு. விபுலன் கருணாகரனினது நிர்வாகத்தினுள் சந்தமரதன் பிரதேச செயலாளரின் அலுவலகத்திலே காணக்கூடியதாக இருந்த பொதுவான நிர்வாக குறைபாடுகள் எவை? *(08 புள்ளிகள்)*

47. சந்த மரதன் பிரதேச செயலாளரின் அலுவலகத்திலே ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் திரு. விபுலன் கருணாகரனிடம் காணக்கூடிய முகாமைத்துவ குறைபாடுகள் எவை? *(08 புள்ளிகள்)*

48. சந்த மரதன் பிரதேச செயலாளர் அலுவலகத்திலே உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை உயர்த்துவதற்காக திரு. மதுரன் சமரசேகரனினால் பயன்படுத்தப்பட்ட நுட்பமுறைகள் எவை? *(08 புள்ளிகள்)*

49. சந்த மரதன் பிரதேச செயலாளர் அலுவலகத்திலே அலுவலக சூழலை மாற்றியமைப்பதற்காக திரு. மதுரன் சமரசேகரனினால் எடுக்கப்பட்ட படிமுறைகள் எவை? *(08 புள்ளிகள்)*

50. திரு. மதுரன் சமரசேகரன் அவர்கள் சந்தமரதன் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட பின்னர் செய்யப்பட்டுள்ள கடமைகளை கருத்திற் கொண்டு அவர் குற்றமற்றவர் எனக் காட்டுவதற்கு அரச சேவை விசாரணை அலுவலகத்தினது பணிப்பாளருக்கு அறிக்கையை அனுப்புவதற்கு மாவட்ட செயலாளர் தீர்மானித்து இருந்தார். அவ் அறிக்கையின் மாதிரியைத் தயாரிக்குக. *(08 புள்ளிகள்)*

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ... සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

| வினா இல | புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 (i) | |
| 4 (ii) | |
| 4 (iii) | |
| மொத்தம் | |
| விடைத்தாள் பரீட்சித்தவர் | |
| புள்ளிகள் பதிந்தவர் | |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் /

Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2013 (2014)

**(05) ஆக்கபூர்வ, பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள்**

Creative, Analytical and Communication Skills

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடையளிக்குக. **சுட்டெண் :** ..............................

**1.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிந்து பகுப்பாய்வுடனும் தர்க்கரீதியாகவும் விடயங்களை முன்வைத்து **250 - 300** சொற்கள் அடங்கும் வகையில் கட்டுரையொன்று எழுதுக.

(i) மனித சமுதாயத்திற்கு அச்சுறுத்தலான போதைப் பொருள் வர்த்தகத்தை உலகிலிருந்து அழித்தொழிக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்.

(ii) உலகிலிருந்து பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதும், ஆணாதிக்கத்தினால் இழந்துபோன தமது உரிமைகளை வென்றெடுப்பதும் தொடர்பாகச் செயற்படுகின்ற பெண்ணியவாதிகளின் நடவடிக்கைகள்.

(iii) ஆளுமை வளர்ச்சி, மன அமைதி, மற்றும் மனித விழுமிய வளர்ச்சிக்கு இலக்கியம் மற்றும் அழகியற் கல்வியைக் கற்பதால் ஏற்படும் நற்பயன்கள்.

(iv) கைத்தொழில் அபிவிருத்திக்காக 'நனோ' தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதனால் பெறக்கூடிய பலாபலன்கள்.

(v) வீதி வலையமைப்பு மற்றும் போக்குவரத்து சேவை அபிவிருத்தி என்பவற்றால் இலங்கை மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்.

(vi) மத்தியகிழக்கு நாடுகளின் அரசியல் நெருக்கடிகளையும் மோதல்களையும் தீர்ப்பதில் உலக வல்லரசுகளின் தலையீடு.

........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

[ பக் 2 ஐப் பார்க்க.

[ பக் 3 ஐப் பார்க்க.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

*(30 புள்ளிகள்)*

**2.** பின்வரும் பந்தியை வாசித்து அதன் சொற்களின் எண்ணிக்கை **மூன்றிலொன்றாகும் வகையில்** அதன் சாராம்சத்தை சுருக்கி எழுதி பொருத்தமான **தலைப்பொன்றையும்** இடுக. சுருக்கத்தின் இறுதியில் நீங்கள் பயன்படுத்திய **சொற்களின் எண்ணிக்கையையும்** குறிப்பிடுக.

இலங்கையின் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் விட்டுச் செல்லும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பையும் நலன்களையும் அதிகரிக்கும் அதே வேளை அதிக வெளிநாட்டு வேலைவாய்ப்பைக் கவருவதற்கும் 2010 இல் பொருத்தமான அதிகார சபைகளால் பல எண்ணிக்கையான கொள்கை வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கிணங்க தொழிலாளர் புலம்பெயர்வு தொடர்பான முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பன்னாட்டு தொழில் நிறுவனத்தின் ஆலோசனையுடன் தேசிய தொழிலாளர் புலம் பெயர்வுக் கொள்கையொன்று விருத்தி செய்யப்பட்டது. இச்செய்கையானது சிறந்த ஆளுகை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தலை வழங்குதல், இலங்கையின் வெளிநாட்டு ஊழியர்களுக்கான பயனுறுதிமிக்க பாதுகாப்பு மற்றும் பணிகள், பணவனுப்பல்கள் நியதிகளில் கூடிய பங்களிப்பைத் திரட்டுதல் மற்றும் நாடு திரும்புவோரை ஒருங்கிணைத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இருபக்க உடன்படிக்கைகளூடாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர் சம்பந்தமான பன்னாட்டு உறவுகளை வசதிப்படுத்தும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களூடாக தொழில் வழங்கும் நாடுகளில் புலம்பெயர் தொழிலாளர் மீது செல்வாக்குச் செலுத்தும் கொள்கையை மேற்கொள்ளும் நோக்குடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

புலம் பெயர்ந்த பெண் ஊழியர்களுக்காக நடத்தப்படும் கட்டாய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக ஆண் தொழிலாளர்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதற்காக ஆண்களுக்கான ஐந்து நாள் கட்டாய பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆரம்பித்தது. மிகவும் முக்கியமாக, தலைமை அலுவலகம் மற்றும் அதன் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்கள் மற்றும் தொழிலாளர்களைப் பெறும் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உள்நாட்டு ஆட்சேர்ப்பு முகவர்கள் ஆகியோருக்கிடையே இணைப்புக்களைப் பேணுவதற்கு கணினி வலையமைப்பொன்றும் விருத்தி செய்யப்பட்டது. மேலும், வெளிநாட்டுத் தொழில்களுக்காக புலம் பெயர் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் ஆட்சேர்ப்பு முகவர்களால் வழங்கப்படும் பெறுமதி மிக்க பணிகளைக் கவனத்திற் கொண்டு உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கும் அவர்களுக்கு தேசிய அங்கீகாரத்தை வழங்குவதற்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இலங்கைக் கட்டளைகள் பணியக்த்தின் தொழில்நுட்ப உதவியுடன் தரமிடும் திட்டத்தை ஏற்பாடு செய்தது.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

[ பக் 4 ஐப் பார்க்க.

(25 புள்ளிகள்)

**3.** பின்வரும் ஒவ்வொரு பந்தியினதும் முக்கிய கருத்தை இயன்றளவு சுருக்கமாக ஒரு **வாக்கியத்தில்** எழுதி, **தடித்த எழுத்துக்களில்** உள்ள பதங்களை **விளக்கி** எழுதுக.

(i) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் உச்ச அரசாங்க நிறுவனமான தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இத்துறையின் அபிவிருத்திக்கான கொள்கைகளை உருவாக்குவதில் அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது. உலக வங்கி "முன்னோடி நெருக்கடி பதிலிறுக்கும் வசதி" இன் கீழ் சிறிய நடுத்தர தொழில்முயற்சித்துறைக்கு 2010 இலும் தொடர்ந்து உதவியது. இத் திட்டத்தின் கீழ், சிறிய, நடுத்தர தொழில் முயற்சித்துறை நிதியிடல் வசதிகளை வழங்கும்போது அரச மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கு **மீள்நிதியிடல்** கடன்களின் பகுதியளவிலான கொடுகடன் உத்தரவாதம் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றுக்கு வசதியளிக்கப்பட்டது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு துணை ஒப்பந்த அடிப்படையில் தொழிற்படும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு பொருளாதார சேவைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கவும், 10 சதவீதம் கொண்ட சலுகை ரீதியிலான வருமான வரி வீதத்தை வழங்கவும் வரவு செலவுத்திட்டம் 2011 இல் முன்மொழியப்பட்டது.

(ii) அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் சமூக அமைப்பையுந் தாக்குவனவாயின. இத்தாக்கங்கள், வளரும் பரம்பரையினரின் கல்விக்கென நிறுவப்பட்ட நிறுவனங்களின் தன்மைகளிலே பிரதிபலித்தன. கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே, பிரித்தானியர் ஒரு சிறந்த நிருவாக அமைப்பைப் பிரதான துணையாகக் கொண்டு, இலங்கையிலே தம் ஆதிக்கத்தை வலுப்படுத்தினர். இதற்குக் கல்வி முறை ஒருவலுவுள்ள ஆயுதமாகத் துணைபுரிந்தது. மேலைநாட்டு ஆதிக்கம் நுழைய **பரம்பரை பரம்பரையாக நிலவிய 'குரு - சீடன்' முறை** மறைந்தது. அதற்குப்பதிலாக, வகுப்பறைகளிலே பாடசாலை ஆசிரியராலே தொகையிற் கூடிய மாணவருக்குக் கற்பிக்கும் முறை புகுந்தது. பேரரசு நாட்டிலே நிலவிய கல்வி முறைமையொன்று கடைப்பிடிக்கப்பட்டது. எனவே, கலைத்திட்டப் பொருளடக்கம் இந்நாட்டு மக்களின் தேவைகளுக்கேற்றதாய் அமையவில்லை.

[ பக் 5 ஐப் பார்க்க.

(iii) டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தபின்னர் மரபுவழியான சித்திரக் கைப்பணி குடிசைக் கைத்தொழிலாகப் பயிற்றப்பட்டு ஒருபக்க வருவாய்க்கு வழியாக ஊக்குவிக்கப்பட்டது. அதேவேளை "சுயராஜ் இயக்கம்" என அழைக்கப்பட்ட இந்தியச் சுதந்திரப் போராட்டம் இந்நாட்டு அரசியற் கருத்துக்களிலே பெருமளவு ஆதிக்கஞ் செலுத்தியது. தங்கள் போராட்டத்தின் வலியதொரு கருவியாக இறக்குமதிப் பிரதியீடென்னும் பொருளாதார முறையை இந்தியர்கள் புகுத்தி, இறக்குமதிப் பொருள்களுக்குப் பதிலாக, உள்நாட்டிலே செய்த பண்டங்களைப் பயன்படுத்துமாறு மக்களை வற்புறுத்துஞ் "சுதேச இயக்கத்தை" நடாத்தினர். நம்நாட்டுத் தேசியவாதிகளின் உள்ளங்களையும் இது கவர்ந்தது. **இறக்குமதிப் பிரதியீடு** நம் பொருளாதார மீட்சியாயமையுமென அவர்கள் கருதினர். எவ்வாறாயினும், இது பற்றிய அவர்களின் முயற்சி, மரபுவழிவருஞ் சித்திரக் கைப்பணிகளின்பால் திரும்பியது. இப்பொருள்களைச் செய்யப் பெரிய இயந்திரங்களோ, விலைகூடிய இயந்திரங்களோ தேவைப்படவில்லை. இவை பெரும்பாலும் கைகளாலேயே செய்யப்பட்டன.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

*(05 × 3 = 15 புள்ளிகள்)*

**4.** பின்வரும் ஒவ்வொரு பந்தியையும் வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **சுருக்கமாக விடை** தருக.

(i) உயர் கல்வித் துறையில் அரசல்லாத பல்கலைக்கழகங்களை அமைப்பதால் இலங்கை மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புக்கள் மற்றும் தெரிவுகளை இலங்கையால் விரிவாக்க முடியும். நாட்டின் உபாயமிக்க புவியியல்சார் அமைவிடம் தொழிற்படையின் பணி சார்ந்த கலாச்சாரம் மற்றும் உள்நாட்டு கல்வியாளர்களின் புலமை, இயலளவு போன்ற போட்டித்தன்மைமிக்க அநுகூலங்கள் இருப்பது இந்தத் தேர்வை செயலாற்றக்கூடிய தன்மை மேம்பட்டிருப்பதைக் குறிக்கிறது. ஆகவே, இந்தக் கொள்கை இலங்கை பன்னாட்டு நிறுவனங்களின் தரத்துக்குச் சமமாக, குறைந்த செலவில் கல்வியை வழங்கக்கூடியவாறு பலனைத் தந்து, கிட்டிய எதிர்காலத்தில் உயர் கல்விப் பணிகளை ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும். கடந்த காலத்தில் இந்தத் துறையில் முதலீடு செயற்கையான முறையில் தடை செய்யப்பட்டதால் இந்தப் புதிய நடவடிக்கை உயர் கல்வித் துறையை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் கொள்ளளவு மேம்படுத்தல் துறைகளில் ஊக்குவிக்கும். இந்த முன்னெடுப்பு பல்கலைக்கழகங்களுக்கிடையிலான அதிகரித்த போட்டியில் கல்வித் தரத்தை கூட்டவும் திறமை மிக்க வளங்கள் திரட்டப்படுவதனையும் தூண்டும். இப்படியான அதிகமான போட்டி, உள்நாட்டு தொழிலாளர் சந்தையிலுள்ள கேள்வி மற்றும் நிரம்பல் பொருத்தப்பாட்டினைச் சீர்செய்வதற்கு உதவும் அதேவேளையில் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பாக அமையும்.

(அ) உள்நாட்டு தொழிலாளர் சந்தையிலுள்ள கேள்வி மற்றும் நிரம்பல்களுக்கிடையிலான பொருத்தப்பாடின்மையை சீர் செய்வது தொடர்பில் ஒன்றுக்கொன்று காரணமாகும் விடயங்கள் சில இப் பந்தியில் ஒழுங்குமுறையில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(ஆ) இப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசல்லாத பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவதன் தேவை மற்றும் குறித்த கல்விக் கொள்கையை செயற்படுத்துவது தொடர்பான இயலளவை உறுதி செய்யும் விடயங்கள் யாவை?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

[ பக் 6 ஐப் பார்க்க.

(இ) பல்கலைக்கழகங்களுக்கிடையே உயர் கல்வித்துறையின் தரத்தை அதிகரிப்பதற்கு தூண்டும் போட்டித் தன்மையை அதிகரிக்க துணையாகும் பூர்வ விடயம் எது?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(ஈ) அண்மிய எதிர்காலத்தில் உயர் கல்வி சேவையை ஏற்றுமதி செய்யும் முயற்சியை வெற்றியடையச் செய்வதற்காக இப்பந்தியில் காட்டப்பட்டுள்ள உத்தி எது?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(உ) இங்கு முன்மொழியப்பட்ட புதிய கொள்கைக்கு முன்னர் உயர் கல்வித்துறையின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடைமுறைகளைப் போன்றே கல்வி பணிக் குழுவினரையும் மேம்படுத்துவதற்கு தடங்கல் ஏற்பட்டது எவ்வாறு?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

(ii) உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் உள்நாட்டில் முன்னேற்றமடைந்த வளர்ச்சி வாய்ப்புக்களுடன் வெளிநாட்டுத்துறை 2011 இல் மேலும் பலமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்ப உற்பத்திகளைக் காட்டிலும் பெறுமதிகூட்டப்பட்ட மற்றும் முடிவுப் பொருள்களில் கூடிய கவனம் செலுத்துதல் ஏற்கனவே இருக்கும் பன்னாட்டு வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்தும் அதேவேளை தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் ஆழமாக நுழைதல் போன்ற ஏற்றுமதி உற்பத்திகளின் சொத்துப்பட்டியல் மற்றும் சந்தைகளை விரிவாக்கல் மற்றும் பன்முகப்படுத்தலை அடைவது தொடர்பாக பல முன்னெடுப்புக்கள் ஏற்கனவே நெறிப்படுத்தப்பட்டன. மேலும் பொருளாதாரத்துக்குக் கூடிய வெளிநாட்டுச் செலாவணியைக் கவரும் சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் எதிர்பார்க்கப்படாத பொருட்களின் விலைத்தளம்பல்கள் மற்றும் குறுகியகால நிதியியல் உட்பாய்ச்சல்களிலிருந்து ஏற்படக்கூடிய விரிவான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலிருந்து எழும் எந்தவொரு வெளிநாட்டு அதிர்வுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய தன்மையைப் பேணும் பொருட்டு முன்னெச்சரிக்கையான வழிமுறைகள் இருப்பது அவசியமாகும்.

(அ) வெளிநாட்டு அதிர்வுகளினால் தோன்றும் பொதுவான இயல்புகள் யாவை?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

[ பக் 7 ஐப் பார்க்க.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டு துறைகளை வலுவாக்கும் எதிர்பார்ப்பை வெற்றியடையச் செய்வது தொடர்பாக இங்கு காட்டப்படடுள்ள முற்தேவைகள் யாவை?

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

(இ) சுற்றுலாத் துறையைப் பிரபலமடையச் செய்தல் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் யாவை?

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

(ஈ) நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை வலுப்படுத்தத் தேவையான பாதுகாப்பு நடைமுறைகளை எவ்வாறு செயற்படுத்தலாம்?

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

(உ) ஏற்றுமதி உற்பத்திகளின் சொத்துப் பட்டியல் மற்றும் சந்தைகளை விரிவாக்கல் தொடர்பான பல்வேறு நடைமுறைகளின்போது அதிக கவனம் எவ்விடயம் தொடர்பாகச் செலுத்தப்பட்டது?

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

(iii) மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் இலங்கைத் துணைத் தேசிய அரசாங்க முறைமையினை உள்ளடக்கியுள்ள யாப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதுடன் இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்ற முறைமை 335 நிறுவனங்களை கொண்டிருக்கிறது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளூராட்சி மன்ற முறைமை 23 மாநகர சபைகளையும் 41 நகரசபைகளையும் 271 பிரதேச சபைகளையும் உள்ளடக்கியுள்ளது.

2013 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு துணைத் தேசிய அரசாங்க மட்டத்தில் அபிவிருத்தியில் இன்றியமையாததொரு பங்கினைத் தொடர்ந்தும் ஆற்றியது. அமைச்சு மாகாண சபை மட்டத்திலும் உள்ளூராட்சி மன்ற மட்டத்திலும் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணும் பொருட்டு துணைத் தேசிய அரசாங்க அதிகாரசபைகளுடன் மிகக் காத்திரமான முறையில் தொடர்ந்தும் பணியாற்றிதுடன் கொடைமுகவர்களுடன் காத்திரமான ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் முதலீடுகளுக்கும் வசதியளித்தது. மேலும் பொதுமக்களுக்கு சிறந்த பணிகளை வழங்கும் விதத்தில் உட்கட்டமைப்பு வசதிகளும் முகாமைத்துவ இயலாற்றல்களும் மேம்படுத்தப்பட்டன. தரமுயர்த்தப்பட்ட பணிகளை வழங்கவும் பொதுமக்களுக்கான தேவைகளை சரியான நேரத்தில் முடிப்பதற்குமாக அமைச்சினால் பல நிகழ்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டன. இதற்கமைய கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமானது அமைச்சின் கீழ் வரும் தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ ஆதரவு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் "வினைத்திறன் மிக்க பணிகளை வழங்குவதன் மூலம் நாளைய சுபீட்சம்" என்ற தொனிப்பொருளில் உள்ளூராட்சி மன்ற வாரமொன்று 2013 இல் நடத்தப்பட்டது.

[ பக் 7 ஐப் பார்க்க.

(அ) மக்களின் தற்கால பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அதிக பயனுள்ள சேவையை வழங்குவதற்கும் அமைச்சு பயன்படுத்திய உத்தி யாது?

(ஆ) 2013 ஆம் ஆண்டிறுதியில் இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் தொகுதி அமைப்பு எத்துறைகளை உள்ளடக்கி இருந்தது எனக் குறிப்பிடுக.

(இ) அமைச்சின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை?

(ஈ) துணைத் தேசிய அரசாங்க அதிகார சபைகளுடன் அமைச்சு எந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தொடர்ச்சியாகச் செயற்பட்டது?

(உ) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு எதிர்பார்க்கும் பெறுபேறு "முதலீட்டு செயன்முறைக்கு வசதி வழங்கல்" எனின் அதற்காகப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?

*(02 × 5 = 10 புள்ளிகள்)*

***